1978 செப்டம்பர் 12]

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : So far as I know, all the District Judges own cars. Chief Judicial Magistrates and District Judges do really own cars. There is no difficulty. Any self-respecting Judicial Officer will not accept any lift from any member of the Bar.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதிபதிகள் பெரும்பாலும் சுற்றுப்பயணம் செய்யவேண்டிய அவசியமற்றவர்கள். அவர்களுடைய கோர்ட்டுகளுக்குப் பக்கத்திலேயே வீடுகளை அமைத்துக்கொடுத்தால், மன்னார்குடியில் முனிசீஃப் கோர்ட்டுக்குப் பக்கத்திலேயே முனிசீஃப் வீடு இருக்கிறது. அந்த முறையில் எல்லா பகுதிகளிலும் கோர்ட்டுகளுக்குப் பக்கத்திலேயே நீதிபதிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : Such a factor has been taken into consideration in constructing quarters for Judicial Officers at present and it will be done so in future also.

அவிநாசி பஞ்சாயத்து யூனியன்.

* வினா—162 திரு. சொ. நா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா?

அவிநாசி பஞ்சாயத்து யூனியனை இரண்டாக பிரிப்பதற்கான உத்தேசம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது பற்றிய கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. சொ. நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி ஊராட்சி ஒன்றியம் மிக அதிகமான பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருப்பதாலே நிர்வாக சௌகரியத்திற்காக அதைப் பிரித்தால் மிக நலமாக இருக்கும். ஆகவே, அமைச்சரவர்களை தயவுசெய்து பிரித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஊரக வளர்ச்சி இயக்குநர் அதை அரசுக்கு அனுப்பியவுடன் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.